(இ) அந்தப் பணத்தை அந்த மாவட்டத்திற்கு மட்டும் செலவு செய்யும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) ரூ. 1,10,000.

(இ) இல்லை.

மனுநீதி நாள்

*** 315 வினா—திரு. எம். முத்தையா :** மாண்புமிகு உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) "மனுநீதி நாள்" திட்டத்தின் அடிப்படையில் நெல்லை மாவட்டத்தில் எத்தனை கிராமங்களில் 1—1—1970 முதல் 1—6—1971 வரை மனுநீதி விசாரணை நடத்தப்பட்டுள்ளது ?

(இ) மனுநீதி விசாரணைக்கு வந்த மகஜர்கள் எத்தனை ?

(உ) மனுநீதி நாள் திட்டத்தின் மூலம் பயனடைந்தவர்கள் எத்தனை பேர் ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) மனுநீதி திட்ட அடிப்படையில் 1—1—1970 முதல் 1—6—1971 வரை நெல்லை மாவட்டத்தில் 1,273 கிராமங்களில் விசாரணை நடத்தப்பட்டுள்ளது.

(இ) 23,844 மனுக்கள் மனுநீதி விசாரணைக்கு வந்தன.

(உ) இத்திட்டத்தின் மூலம் 7,340 பேர் பயனடைந்தனர்.

திரு. எம். முத்தையா : தலைவர்களே, இந்த மனுநீதி திட்டத்தின் காரணமாக அநேகமாக கிராம மக்கள் பயன் பெறுகிறார்கள். ஆகவே, இந்த மனுநீதித் திட்டத்தை தீவிரப் படுத்தி, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு தனி அதிகாரியை நியமிக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மனுநீதித் திட்டம் நிரந்தரமாக வைப்பது என்பது இல்லை. ஆங்காங்கு அதிகாரிகள் சென்று மக்களுடைய குறைகளை விசாரித்து நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். ஒவ்வொரு கிராமம் கிராமமாகச் சென்று இப்படிச் செய்து வருகிறார்கள். எல்லா கிராமங்களிலும் இப்படி செய்து முடித்த பின்னர், மறுபடியும் எல்லாக் கிராமங்களுக்கும் ஒரு முறை வருவார்கள்.

Eviction of peasants in Saptur.

* 316. Q.—THIRU K. T. K. THANGAMANI : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state :

(*a*) whether representations have been received from **Saptur** in Tirumangalam taluk, Madurai district about illegal orders by Tahsildar in regard to the eviction of authorised peasants in support of **Zamindar;**